## இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாத அளவிற்கு மூத்த முன்னோடிகளுக்கு உதவித்தொகை!

# ஒன்றிய பா.ஜ.க. அரசை-வரும் தேர்தலில் வீட்டிற்கு அனுப்பத் தயாராவீர்!

## திருப்பத்தூரில் - மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

திருப்பத்தூர், ஜூலை 21 -

**இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாத அளவிற்கு மூத்த முன்னோடிகளுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது தி.மு.க. என்றும், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை தோற்கடித்து வீட்டிற்கு அனுப்ப தயாராக இருக்க வேண்டும் என்று திருப்பத்தூரில் நடைபெற்ற கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி உரையாற்றுகையில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

**அவரது உரை வருமாறு :**

உங்கள் அத்தனைப் பேருக்கும் எனது முதற்கண் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பேசும் போது சொன்னார்கள். நான் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக எந்த மாவட்ட அமைச்சர், எந்த மாவட்டக் கழகச் செயலாளர் என்னிடத்திலே தேதி வாங்கினாலும், நான் அவர்களிடத்திலே சொல்லும் ஒரே அன்புக் கட்டளை, நீங்கள் என்னை வைத்து எத்தனை நிகழ்ச்சி வேண்டுமானாலும் நடத்திக்கொள்ளுங்கள், அத்தனை நிகழ்ச்சியிலும் நான் கலந்துகொள்கிறேன். ஆனால், என்னுடைய மன மகிழ்ச்சிக்காக நீங்கள் நிகழ்ச்சி நடத்தவேண்டும். அது, கழகத்திற்காக உழைத்த கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளை நீங்கள் அழைத்து, அவர்கள் அனைவருக்கும் பொற்கிழி வழங்கி, அவர்களை நீங்கள் கௌரவப்படுத்த வேண்டும். இதுதான் அவர்களிடத்திலே நான் சொல்கின்ற ஒரு அன்புக் கட்டளை. அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றேன்.

எனவே, அதன் தொடர்ச்சியாக, இந்த நிகழ்ச்சியை, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே, உங்களையெல்லாம் சந்திப்பதற்கு வாய்ப்பளித்த அவருக்கும், நல்லதம்பி அவர்களுக்கும், தேவராஜ் அவர்களுக்கும் மாவட்டக் கழக நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு நான் பல முறை வந்திருக்கின்றேன். கட்சியினுடைய அடிப்படை உறுப்பினராக வந்திருக்கின்றேன், இளைஞர் அணிச் செயலாளராக வந்திருக்கின்றேன், சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கின்றேன், ஆனால், முதல்முறையாக அமைச்சர் பொறுப்பை ஏற்று, உங்களையெல்லாம் சந்தித்து வாழ்த்துப் பெறுவதற்காக இப்போது வந்திருக்கின்றேன்.

'என்னை வாழ்த்துவதற்கு கலைஞர் இல்லையே' என்ற அந்தக் குறையை, இன்று நீங்கள் போக்கி இருக்கிறீர்கள். என்னை வாழ்த்துவதற்கு இத்தனை கலைஞர்கள் வந்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலைஞர் இல்லாத குறையைப் போக்கியுள்ளீர்கள்!**

காலை 9 மணி முதல் வேலூர் மாநகரத்திலே பல்வேறு நிகழ்ச்சிகள். விளையாட்டுத் திடல் ஆய்வு, கழகக் கொடியேற்று நிகழ்ச்சி, கிட்டத்தட்ட ஒரு பதினைந்தாயிரம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி. அதன் பிறகு, மாவட்டத்தினுடைய ஆய்வுக் கூட்டம். எனக்கு இன்று மதியம் சாப்பாடு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையே போய் விட்டது. ஒரு 3 மணி அளவில் மதிய உணவு கொடுத்தார்கள். முதலில், உங்களிடம் அத்தனைப் பேரின் சார்பாகவும் நான் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இங்கு வந்த பிறகுதான் சொன்னார்கள். உங்களையெல்லாம் கிட்டத்தட்ட 6 மணிக்கெல்லாம் வர வைத்து விட்டார்கள் என்று. ஆய்வுக் கூட்டத்தை முடித்து வருவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. அதற்காக, நீங்கள் அனைவரும் என்னை மன்னிப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆய்வுக் கூட்டத்தை முடித்துவிட்டு, இங்கு வந்திருக்கிறேன். என்னுடைய முகத்தைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். கொஞ்சம் சோர்வாகத்தான் இருந்தது. களைப்பாகத்தான் இருந்தேன். ஆனால், வந்த பின்பு உங்களுடைய முகங்களை எல்லாம் பார்த்த பின்பு, தனியாக ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது, தெம்பு ஏற்பட்டிருக்கின்றது.

தலைமைக் கழகத்தின் சார்பாக, கலைஞருடைய அறக்கட்டளையின் பெயரில் கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள், மாதம் 8 பேருக்கு அவர்களுடைய நபர்களுடைய மருத்துவச் செலவு, குடும்பத்தினுடைய கல்விச் செலவு, அதற்காக மாதம் 25 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் தலைமைக் கழகத்தின் சார்பாக, அண்ணா அறிவாலயத்திலிருந்து இதுவரை கழக மூத்த முன்னோடிகளுக்கு ரூபாய் 5 கோடியே 50 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இளைஞர் அணி அறக்கட்டளையின் சார்பாகக் கடந்த நான்கு மாதங்களாக மருத்துவ உதவிகள் தேவைப்படும் கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வழங்கப்பட்டு இதுவரை 50 லட்சம் ரூபாய் கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, மாவட்ட கழகத்தின் சார்பாகக் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் என்னுடைய எந்த பயணமாக இருந்தாலும் சரி கழக நிகழ்ச்சிப் பயணமாக இருந்தாலும் சரி,

**கழக முன்னோடிகளுக்கு ரூ. 26 கோடி உதவித்தொகை**

கரூர், கோவை, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவண்ணாமலை என கழகத்தின் 26க்கும் அதிகமான கழக மாவட்டங்களில் இதுமாதிரி பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்தி, இதுவரைக்கும் 26 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையை கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளுக்கு உதவித் தொகையாக நாங்கள் வழங்கியிருக்கின்றோம்.

இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாததை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிறது என்றால், அது பெருமைக்காகச் சொல்வதில்லை அதுதான் உண்மை. இந்த இயக்கம் இத்தனை ஆண்டு காலம் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்து வருகிறது என்றால், அதற்குக் காரணம் கழகத்தின் மூத்த முன்னோடிகளாகிய நீங்கள்தான்.

பெருமையாகப் பேசுகின்றோம் கலைஞருடைய நூற்றாண்டு, கலைஞருடைய பெருமையைச் சொல்கிறோம் ஐந்து முறை தமிழ் நாட்டை ஆண்டவர் கலைஞர் என்று .

அதற்கு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஐந்து முறை அமர்ந்திருந்தால் என்றால் அதற்கு முக்கிய காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள் நீங்கள் தான். அதுமட்டுமல்ல, நம்முடைய தலைவர் முதலமைச்சராக அங்கே அமர்ந்திருக்கிறார் என்றால், அதற்கும் முக்கிய காரணம் நீங்கள்தான்.



நான் பல, இதுபோன்ற மூத்த முன்னோடிகளைச் சந்திக்கும் போதெல்லாம் பெருமையாகச் சொல்வேன், சென்ற சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றோம் என்றால், அதற்கு தலைவருடைய பிரச்சாரம் நம்முடைய தேர்தல் அறிக்கை இதெல்லாம் மிக மிக முக்கியமான காரணம் என்றால், அதைவிட முக்கியமான காரணம் கழகத்திற்காக உழைத்த கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள் நீங்கள்தான்.

தலைவர் அவர்களும், நானும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு, ஒவ்வொரு தொகுதியில் பிரச்சாரத்தை முடித்துவிட்டு, அடுத்த பகுதிக்குப் போய்விடுவோம். ஆனால், நீங்கள்தான் அங்கே இருந்துகொண்டு அந்தத் தொகுதியிலிருந்து அந்த பிரச்சாரத்தை முழுவதுமாக மக்களிடத்திலே எடுத்துக்கொண்டு சேர்த்து, தேர்தல் பிரச்சாரத்தைக் கடைசி நாள் வரை ஏன் இன்னும் சொல்லப்போனால், தேர்தல் வாக்குப்பதிவு வரைக்கும் யார், யார் நம்முடைய வாக்குகள், யார், யாரெல்லாம் உதயசூரியனுக்கு ஓட்டுப் போடுவார், யாரெல்லாம் எதிர்க்கட்சிக்கு ஓட்டுப்போடுவார் என்று உங்களுக்குத்தான் தெரியும்.

**வியர்வையையும் ரத்தத்தையும் சிந்தி உழைப்பவர்கள்**

அவர்களையெல்லாம் சரியாக அழைத்துக் கொண்டு சென்று, வாக்களித்து தேர்தலினுடையை வெற்றியை உறுதி செய்தவர்கள் கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளாகிய நீங்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நாட்டிலே என்ன நடக்கின்றது என்று உங்களுக்குத் தெரியும், நாங்களெல்லாம் வியர்வை சிந்தி உழைக்கின்றோம் என்றால், நீங்களெல்லாம் அதைவிட ஒருபடி மேலே, வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி உழைத்தவர்கள்தான் கழகத்தினுடைய மூத்த முன்னோடி களாகிய நீங்கள்.

இன்று நினைக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களை மிரட்டி விடலாம், பயமுறுத்திவிடலாம் என்று நினைக்கிறார்கள். நான் சொல்கின்றேன்... நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பார்த்தவர்கள், ஏன்? நம் தலைவர் அவர்கள் மிசாவையேப் பார்த்தவர்

இந்த ஒன்றிய பா.ஜ.கவினுடைய இ.டி., ஐ.டி. ரெய்டுக்கெல்லாம், பயப்படுபவர் நம்முடைய தலைவர் அவர்கள் கிடையாது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் ஒன்று சொல்கிறேன், 1975ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார், ஆட்சி கலைக்கப்பட்டிருக்கிறது. எமெர் ஜென்ஷி காலம், வழக்கம்போல் கலைஞர் அவர்கள் காலை 8 மணிக்கு கோபாலபுரம் வீட்டிலிருந்து வெளியில் வருகிறார். அப்போது வருமான வரித் துறை அதிகாரிகள் அப்பவே 1975இல் வருமான வரித் துறை அதிகாரிகள் வந்து வாசலில் நிற்கிறார்கள்.

கலைஞர் அவர்களிடத்திலே கேட்கிறார், 'என்ன வேண்டும்?' என்று. அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் முதலமைச்சரான அப்புறம் தான் இந்த வீடு வாங்கி இருக்கிறீர்கள், கோபாலபுரத்தில் உள்ள வீட்டை அப்படி என்று புகார் வந்திருக்கிறது, நாங்கள் வந்து இந்த வீட்டை அளக்க வேண்டும் என்று சோதனை போட வேண்டும் என்று அப்போதே 1975ல் அதிகாரிகள் வந்து கலைஞர்களுக்குச் சொன்ன போது, கலைஞர் கொஞ்சம்கூட பயப்படாமல் அந்த அதிகாரிகளைப் பார்த்துச் சொன்னது.

“ஏம்பா, இது 1956ல் நான் வாங்கிய வீடு. உங்களிடம் புகார் கொடுத்த நண்பர் எம்.ஜி.ஆர்க்கு இதுக்கூடவா தெரியாது”, நக்கலாக அதிகாரியிடம் சொன்னவர்தான் நம்முடைய முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள்.

**சோதனைக்கு நடுவே, உடன் பிறப்புகளுக்கு கடிதம்**

அதன் பிறகு கலைஞர் அவர்கள், என்னுடைய பாட்டி தயாளு பாட்டியை அழைத்து, வருமான வரித்துறையிலிருந்து வந்திருக்கிறார்கள். “வீட்டை மதிப்பீடு செய்ய வேண்டுமாம், சோதனை போட வேண்டுமாம், அவர்களுக்கு டீ, காபி போட்டுக் கொடு” அப்படி என்று சொல்லிவிட்டு, கலைஞர் அவர்கள் கோபாலபுரத்திலிருந்து கிளம்பி, முரசொலி அலுவலகத்திற்குச் சென்றுவிட்டார்.

கலைஞர் அவர்கள் முரசொலி அலுவலகத்திற்கு போனதற்குப் பிறகு அங்கு உட்கார்ந்து உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார், அங்கேயும் சோதனை போட வேண்டும் என்று சொன்னபோது, கலைஞர் கேட்கிறார் நான் உடன்பிறப் புகளுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதனால் உங்களுக்கு ஏதும் பிரச்சினை இல்லையே என்று அப்படிக் கேட்டு சோதனைக்கு நடுவே உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதியவர்தான் நம்மு டைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரைச்சுற்றி அதிகாரிகள் முரசொலி அலுவலகத்தையே சோதனை போடுகிறார்கள், தொலை பேசி இணைப்பையெல்லாம் நிறுத்து கிறார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் எதற்கும் அசையவில்லை.

இரவு 2 மணி வரைக்கும் சோதனை நடந்தது. ஆனால், அந்த சோதனையில், எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுமாதிரி ஏராளமான சோதனைகளைப் பார்த்த இயக்கம் தான் திராவிட முன்னேற்றக்கழகம். அப்படிப் பட்ட கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள்தான் நாங்கள். எங்களுக்கு உங்களுடைய இ.டி., ஐ.டி., சி.பி.ஐ. எல்லாம் எம்மாத்திரம்? இதற்கெல்லாம் நாங்கள் பயந்தவர்கள் கிடையாது. இன்று காலையிலிருந்து நம்முடைய அமைச்சர் பொன்முடி அவர்களுடைய இல்லத்தில் சோதனை நடந்து கொண்டிருக்கிறது.

**சுவர் ஏறிக் குதித்து ஓடிய அ.தி.மு.க. அமைச்சர்**

அவர்கள் நினைக்கிறார்கள் ஒன்றிய பா.ஜ.க அரசு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் நினைக்கிறார்கள்... எப்படிச் சென்ற அ.தி.மு.க ஆட்சியை இப்படிப்பட்ட சோதனைகள் எல்லாம் நடத்தி அவர்களுடைய கட்டுப்பாட்டில் வைத்து இருந்தார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். முன்னாள் அமைச்சர்கள் விஜயபாஸ்கர், புதுக்கோட்டையிலிருந்து விஜயபாஸ்கர் அவர்களுடைய இல்லத்திலே சோதனை நடந்தது. அப்போது அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் அவர்கள் வீட்டுக்கு வெளியே ஓடி வந்து அப்போது இடைத்தேர்தலில் நடந்து கொண்டிருந்தது

ஆர்.கே நகர் இடைத்தேர்தல் இதெல்லாம் தொலைக்காட்சி லைவ்வாக பார்த்தீர்கள். ஒரு அமைச்சர் வீட்டிலிருந்து ஓடி வந்து ஒரு புக்கை வெளியில் தூக்கி எறிந்து,சுவர் ஏறிக் குதிக்க முயற்சி செய்து நீங்கள் பார்த்தீர்கள்.

விஜயபாஸ்கர் மட்டுமல்ல தங்கமணி,.வேலுமணி ஆகிய அனைவருடைய வீட்டிலும் சோதனை நடந்தது. இதுவரைக்கும் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ஒன்றிய பா.ஜ.க அரசு. இந்த சோதனைகள் எல்லாம் கையில் வைத்துக் கொண்டுதான் கடந்த 5 ஆண்டுகளாக அ.தி.மு.க ஆட்சியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது ஒன்றிய பா.ஜ.க அரசு.

அதே வேலையை தி.மு.கவிடமும் செய்து பார்க்கலாம் என்று நினைக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு, அது உங்களுடைய கனவிலும் நனவாகாது. எங்களுடையத் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியோ, ஓ.பன்னீர்செல்வமோ கிடையாது, எங்களுடையத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கலைஞருடைய மகன். அதேபோல், சமீபத்தில் பாரதிய ஜனதாவினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்ந்து நான் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

காரணம், நான்தான் சொல்லிக்கொண்டே இருக்கிறேனா, 2013ல் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் தேர்தல் வாக்குறுதிக் கொடுத்தார், என்னாச்சு, முக்கியமான வாக்குறுதி, சொன்னார். திடீரென்று ஒரு நாள் 1,000 ரூபாய் நோட்டு, 500 ரூபாய் நோட்டு செல்லாது என்று சொல்லி அதற்குக் காரணம் என்ன சொன்னார், இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து கருப்புப் பணத்தையும் ஒழித்து அனைவருடைய வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் ரூபாய் நான் போடப் போறேன் என்று சொன்னார்.

**பி.எம். கேர்ஸ் நிதி: இதுவரை கணக்கு இல்லை!**

இதை ஞாபகப்படுத்தியதற்காக நான் மன்னிப்பு கேட்க வேண்டுமாம், நான் சொன்னேன் நான் மன்னிப்பு எல்லாம் கேட்க மாட்டேன், என்னிடம், ஆதாரம் இருக்கு, நீ முடிந்தால் வழக்குப் போடு, ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் 15 இலட்சம் ரூபாய் டெபாசிட் பண்றேன் என்று சொன்னதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கு என்று சொன்னேன். இன்னும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும், 9 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க அரசிற்கும் நம்முடைய தி.மு.க அரசிற்குமான வித்தியாசம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்களுக்குத் தெரியும் கொரோனா பெரும் தொற்று, பேரலை மக்கள் எவ்வளவுப் பெரிய ஆபத்திலிருந்து நம்முடைய கழக அரசு அமைந்து மக்களைக் காப்பாற்றியது என்று. அப்போது ஒன்றிய அரசு ஒரு திட்டத்தை ஆரம்பித்தார்கள். ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள். அதற்கு பெயர் பி.எம்.கேர்ஸ் என்ற பெயரில் ஒரு திட்டத்தை ஆரம்பித்தார்கள். கொரோனா தடுப்பு நடவடிக்கை ஈடுபட வேண்டும், அனைவரும் நன்கொடை கொடுக்க வேண்டும் என்று ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள், வேண்டுகோள் வைத்தார்கள்.

இப்போது, சொல்கிறேன் அந்த பி.எம்.கேர் என்ற அறக்கட்டளையின் பேரில் இதுவரைக்கும் 32 ஆயிரம் கோடி நிதியை ஒன்றிய அரசு வாங்கியுள்ளது. கொரோனா நிவாரண நிதிக்காக வசூல் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அதை யாருக்குச் செலவு செய்தார்கள், எப்படி செலவு செய்தார்கள் என்று எந்த விவரமும் இதுவரைக்கும் தெரிவிக்கப்படவில்லை.

32 ஆயிரம் கோடிக்கு கணக்கு கிடையாது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆர்.டி.ஐ. சட்டத்தில் கேட்டபோதும் அதற்கும் பதில் இல்லை.

அதனால், நீதிமன்றம் வரை இந்த விவகாரம் சென்றது. பி.எம்.கேர்ஸ் அரசு நிதி இல்லை, அது தனியார் அமைப்பு என்று கூறி நழுவிவிட்டார்கள். ஆனால், பி.எம்.கேர்ஸ்க்கு பணம் வசூல் செய்தது என்னவென்றால் அரசு இணைய தளத்தில்தான். கொரோனா இரண்டாம் அலையின் போது நம்முடைய ஆட்சி அமைந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கொரோனா ஒழிப்பு பணிகளுக்காக நிவாரணம் வழங்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும் பொதுமக்களிடத்தில் வேண்டுகோள் வைத்திருந்தார்கள். மக்களும் வாரி வாரி நிதி உதவிகள் தந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மோடியைப் போன்றவர்கள் அல்ல. சட்டமன்றத்தில் அறிவித்தார்கள், எவ்வளவு நிதி வந்தது, அதில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது என அனைத்துமே வெளிப்படையாகச் சொன்னார்கள்.

மே 2021 முதல் ஆகஸ்ட் 2022 வரை மொத்தம் 583 கோடி ரூபாய் முதலமைச்சருடைய பொது நிவாரண நிதிக்கு கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்காக வழங்கப்பட்டது. ஆர்.டி.பி.சி.ஆர்.கிட், ரெண்டிசிவர் மருந்து, ஆக்சிஜன் சிலிண்டர் என மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு மட்டும் ரூபாய் 255 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கொரோனா தொற்றால் உயிரிழந்த நீதிபதிகள், காவலர்கள், முன்கள பணியாளர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயால் தாய் தந்தை எனப் பெற்றோர் இருவரையும் இழந்த 322 குழந்தைகளுக்கு தலா 5 கோடி ரூபாய் என மொத்தம்

16 கோடி ரூபாய் வழங்கியது நம்முடைய கழக அரசு. பெற்றோரில் ஒருவரை கொரோனா நோயால் பறிகொடுத்த 9,565 குழந்தைகளுக்கு தலா 3 லட்சம் என மொத்தம் 287 கோடி ரூபாய் வழங்கியது நம் கழக அரசு. பெற்றோரில் ஒருவரை இழந்த இலங்கை தமிழ் குழந்தைகள் 9 பேருக்கு தலா 3 லட்சம் என மொத்தம் 27 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இப்படி கொரோனா நிவாரண நிதி எதற்காகச் செலவு செய்தோம் என வெளிப்படையாக வெள்ளை அறிக்கை வெளியிட்டது தான் நமது திராவிட மாடல் அரசு.

ஆனால், பி.எம்.கேர்ஸ் என்ற பெயரில் கொரோனா பெயரைச் சொல்லி பாசிஸ்ட்டுகள் கொள்ளையடித்துள்ளனர். இதையெல்லாம் நாம் தட்டிக் கேட்க வேண்டும். நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இன்று பெங்களூரில் இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கழகத் தலைவர் அவர்கள். எதற்காக, என்று உங்களுக்கெல்லாம் தெரியும். பா.ஜ.க என்ற ஒன்றிய அரசை அகற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கின்ற அந்த கூட்டம்.

சென்ற மாதம் பீகார் மாநிலத்தில் நடந்தது. கிட்டத்தட்ட 17 இயக்கங்கள் அதிலே பங்கு பெற்றன. இன்றும் நாளையும் பெங்களூரிலே ஒன்றிய பா.ஜ.க அரசை ஒழிப்பதற்கான, அப்புறப் படுத்துவதற்கான அந்த ஒன்றிணைப்பு கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. சென்ற கூட்டத்தில் 17 இயக்கங்கள் இந்தியாவில் இருக்கக்கூடிய பா.ஜ.க எதிர்ப்பு கட்சிகள் 17 இயக்கங்கள் பங்கு பெற்றன. ஆனால், இன்றும், நாளையும் நடக்க இருக்கின்ற இந்த கூட்டத்தில் கிட்டத்தட்ட இந்தியாவிலிருந்து மொத்தம் 26 எதிர்க்கட்சிகள் ஒன்றாகக் கூடுகிறார்கள் என்றால் இந்த ஒட்டுமொத்த இந்தியாவும் ஒன்றிய பா.ஜ.க அரசை வீட்டுக்கு அனுப்புவதற்குத் தயாராகி விட்டார்கள் என்பதுதான் அர்த்தம். தலைவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறார் இந்த முறை மீண்டும் பா.ஜ.க ஆட்சி அமைந்தால் தமிழ்நாட்டை மட்டுமல்ல இந்தியாவையே காப்பாற்ற முடியாது அப்படிப்பட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசே அப்புறப்படுத்தியே ஆகவேண்டும். அவையெல்லாம் மனதில் கொண்டு நாம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் நமது பணிகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**பெருமையும் பொறாமையும்**

நான் பலமுறை பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன் இந்த மாதிரி கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளை எல்லாம் பார்க்கும் பொழுது எனக்குக் கொஞ்சம் பெருமையாகவும் இருக்கும், அதே நேரத்திலே பொறாமையாகவும் இருக்கும். பெருமைக்குக் காரணம் கழகத்தினுடைய வரலாறு இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறது. பொறா மைக்குக் காரணம் நான் தந்தை பெரியாரைப் நேரில் பார்த்ததில்லை, பேரறிஞர் அண்ணாவை நான் நேரில் பார்த்ததில்லை, அவர்களுடைய பேச்சுகளைக் கேட்டிருக்கிறேன், எழுத்துக்களைப் படித்திருக்கிறேன். ஆனால், நேரில் பார்த்தது கிடையாது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன், இனமான பேராசிரியர் தாத்தா அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால் நீங்கள் இங்கு உட்கார்ந்து இருக்கக்கூடிய கழகத்தின் மூத்த முன்னோடிகள் நீங்கள் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள், பேரறிஞர் அண்ணாவை நேரில் பார்த்திருப்பீர்கள், தேர்தல் பணி செய்திருப்பீர்கள், அவர்களின் கூட்டத்திற்கு சிறைக் சென்று இருப்பீர்கள். அவர்கள் அறிவித்திருக்கின்ற போராட்டங்களில் எல்லாம் நீங்கள் கலந்து கொண்டிருப்பீர்கள். அதனால்தான் உங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாக இருக்கும்.

ஆனால், உங்கள் அத்தனைப்பேரையும் தந்தை பெரியாரினுடைய மறுஉருவமாக, பேரறிஞர் அண்ணாவினுடைய மறுஉருவமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய மறு உருவமாக, இனமான பேராசிரியர் தாத்தாவுடைய மருஉருவமாக உங்களையெல்லாம் பார்த்து உங்களுடைய பாதங்களையெல்லாம் தொட்டு வணங்கி மகிழ்கின்றேன்.

இது கழகத்தினுடைய இளைஞரணி செயலாளராக இது கழகத்தினுடைய மூத்த முன்னோடி களுக்கு உதவித்தொகை வழங்குகின்ற நிகழ்ச்சியாக இதை நான் பார்க்கவில்லை. ஒரு பேரன், தாத்தாவுக்கும் பாட்டிகளுக்கும் செய்கின்ற கடமையாக நான் இதைப் பார்க்கின்றேன். இப்பொழுது நிறைய பட்டபேர்கள் எல்லாம் வைத்துக் கூப்பிடுகிறார்கள். அதிலே முக்கியமான பட்ட பெயர், சின்னவர் என்று அடிக்கடி கூப்பிடுகி றார்கள். இந்தப் பட்டப் பெயரில் எனக்கு நம்பிக்கை கிடையாது ஆனால் இந்த கூட்டத்தைப் பார்க்கும் போது, இந்த மேடையைப் பார்க்கும் போது அரங்கத்திலேயே மிகவும் சின்னவன் நான்தான். அது மட்டுமல்ல பல்வேறு பட்ட பெயர்களெல்லாம் கூப்பிடுகிறார்கள். இளைஞரணி செயலாளர் என்ற பொறுப்பு, அமைச்சர் என்ற பொறுப்பு, சட்டமன்ற உறுப்பினர் என்ற பொறுப்பு ஆனால் அந்த பொறுப்பெல்லாம் இப்போது வரும் நாளைக்குப் போய்விடும். நம்பிக்கையெல்லாம் கிடையாது.

ஆனால், எப்போதுமே எனக்கு நிரந்தரமான பொறுப்பு, பட்டப்பெயர் என்றால் அது எப்போதுமே நான் ஆசைப்படுவது என்னவென்றால் உங்களுடைய பேரப்பிள்ளையாக, உங்கள் வீட்டுச் செல்லப்பிள்ளையாக நான் எப்பொழுதும் இருப்பேன் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்த நல்லதம்பி அவர்களுக்கும், எ.வ.வேலு அவர்களுக்கும், தேவராஜ் அவர்களுக்கும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் உங்கள் அத்தனைப்பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கட்பீஸ் அ. பழனி**

**ஜூலை 21 (2019)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதி பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**